**கொலொன்ன பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொலொன்ன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 3,880,276 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 4,068,210 ஆக காணப்பட்டமையின் காரணமாக காசு மீதி ரூபா 187,934 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதனச் செலவினம் ரூபா 61,144,597 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 59,496,115 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 1,675,482 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மிகை ரூபா 50,541,641 ஆக இருந்த போதிலும், அது ரூபா 50,525,295 ஆக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 16,346 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் அகற்றுவதற்கும், ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த சொத்துக்களின் கிரயம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 64,052 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் ரூபா 34,281,626 ஆக இருந்த போதிலும், அது ரூபா 44,140,935 ஆக காணப்பட்டமையின் காரணமாக ரூபா 9,859,309 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 5 வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,938,093 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 4,907,930 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 969,837 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையினால் ரூபா 77,729,962 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2000 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 369,470 கூட்டுத்தொகையான முன்னைய வைப்புக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,678,718 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,237,150 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 854,000 | 1,087,363 | 1,069,580 | 8,614 | 856,957 | 887,249 | 868,422 | 342,193 |
| வாடகை | 4,568,080 | 3,649,074 | 3,644,855 | - | 5,735,904 | 3,605,316 | 3,600,610 | 4,707 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 726,900 | 958,004 | 958,004 | - | 646,925 | 936,332 | 939,332 | - |
| ஏனைய வருமானம் | 6,703,125 | 7,936,659 | 5,137,308 | 10,429,825 | 4,343,925 | 5,493,206 | 3,993,880 | 7,330,162 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினை விட முறையே 25 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 24 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினை விட முறையே 20 சதவீதம், 48 சதவீதம், 44 சதவீதம் மற்றும் 34 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 04 நீர்ச் செயற்திட்டங்களுக்குரியதாக 2017 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 236,975 தொகையை 2018 மே வரையிலும் அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

(ஆ) கொலன்ன நீர்ச் செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்குகின்ற நுகர்வோர்களின் 131 அலகுகளுக்காக நீர்மானி பொருத்தப்படாதிருந்ததுடன் அதன் ஒரு அலகிலிருந்து மாதாந்தம் ரூபா 100 நிலையான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2018 மே வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 செப்தெம்பர் முதல் 2017 திசெம்பர் வரையான காலத்திற்குரிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) அமுல்படுத்தப்படாத இலக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வருடாந்த பாதீட்டின் பிரகாரம், சபை அதிகாரப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நீர் முன்மொழிவுத் திட்டத்தை நிர்மாணித்தல் மற்றும் நீரை

சுத்திகரிக்கும் அலகை ஏற்படுத்துதல் என்பவைகளுக்காக மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 2,500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய நிகழ்ச்சித் திட்டத்தில் எதுவும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) போதியளவான நிதி ரீதியான வலுவொன்று சபைக்கு சொந்தமாக காணப்படும் போது வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 150,000 தொகையான 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள தடயம்கந்த வாராந்த சந்தை மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக வியாபாரிகளின் வருகையும் குறைவடைந்திருந்தது. சபையினால் வாடகை அறவிடப்படுகின்ற போதிலும், தேவையான வசதிகள் காலரீதியில் வழங்கப்படாமை இந்த நிலைக்கு காரணமாக இருந்த போதும் சந்தையைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொலொன்ன வாராந்த சந்தை வளவு, சந்தை நடவடிக்கைகளுக்காக போதியளவாக இல்லாதிருந்தமையால் அங்குள்ள மீன் வியாபார்கள் கொலொன்ன மாதன வீதி இருபக்கமும் வியாபாரம் செய்தமையின் காரணமாக பிரதேசவாசிகள் மிகவும் வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமையால் சந்தையினை நவீனமயப்படுத்துவதற்காக 2016 நவம்பர் 17 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தியடைந்த கிராம பிரதேசங்களை பெயரிடல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளுக்காக 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர் அந்த பணிகள் 2017 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை**

நீண்ட காலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 3,046,550 பெறுமதியான 05 வாகனங்கள் மற்றும் 02 இயந்திரங்கள் என்பவற்றை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 38 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும், அந்த காணிகளின் உரித்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சூரியகந்த நகரத்தில் 29 காணிக் கூறுகளிலிருந்தும் விஜேரிய கடபொலயில் உள்ள 01 காணிக் கூறிலிருந்தும் நில வாடகை அறவிடப்பட்ட போதிலும், அந்த நிலக்கூறுகளின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு 2018 மே வரையிலும் முடியாதிருந்தது.

**3.4 பெறுகைகள்**

**3.4.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

பெறுகை செயல்நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 126,000 செலவில் தனியார் நிறுவனத்திலிருந்து CFL மின் குமிழ்கள் 280 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பஹல வலக்கட வீதியின் சப்பாத்து பாலத்தை நிர்மாணிக்கும் வேலையின் ஒரு வேலை விடயத்தின் கீழ் 63.680 m3 கொங்கிறீட்டுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக பயன்படுத்தப்பட்டுள்ள அளவு 52.816 m3 ஆனமையால் நிறைவேற்றப்படாத 10.864 m3 இற்காக ரூபா 121,405 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) (i) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,956,014 தொகையான கடமூதூன அபகோய்ல் வீதி அபிவிருத்தி செய்யும் வேலையின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் வீதி ஓரங்களை வெட்டி அமைப்பதாக ரூபா 20,189 தொகை கொடுப்பனவு செய்திருக்கும் போது வேலை விடய இலக்கம் 06 மற்றும் 11 இன் கீழும் JCB இயந்திரத்தைப் பயன்படுத்தி அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 81,260 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கொடுப்பனவுப் பட்டியலின் பிரகாரம் வீதியின் நீளம் 300 m ஆக இருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது காணப்பட்ட உள்ளபடியான நீளம் 290 m ஆனமையால் நிறைவேற்றப்படாத 10 m இற்காக ரூபா 64,365 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 05 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 9,600,000 கூட்டுத்தொகையான மொத்த மூலதன நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்கேடுகளும் பதிவேடுகளும் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| | | (ii) | பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை, செலவினம் குறைத்துப் பதியப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | சொத்துக்களின் பயன்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | | நிறைவேற்றப்படத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை. |